

குழந்தைகள் தினத்தை முன்னிட்டு திருவள்ளூர் மாவட்டம் ஆவடி மாநகராட்சி திருமுல்லைவாயில், சத்யமூர்த்தி நகர் அரசு தொடக்க பள்ளியில் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் கலந்து கொண்டு பள்ளி குழந்தைகளுக்கு இனிப்பு மற்றும் பள்ளி உபகரணங்கள் மற்றும் மாணவர்களுடன் அமர்ந்து காலை உணவு அருந்தினார். உடன் ஆவடி மாநகர மேயர் உதயகுமார், மாநகர ஆணையர் சரண்யா மாநகர சன் பிரகாஷ், மண்டல தலைவர் அமுதா பேபிசேகர், பகுதி செயலாளர்கள் பேபி சேகர், பொன் விஜயன் வழக்கறிஞர் வினோத் மற்றும் பள்ளி ஆசிரியர்கள் உள்ளனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (14.11.2025) சிவகங்கை மாவட்டத்திலிருந்து காணொலிக்காட்சி வாயிலாக 2025–26ஆம் கல்வி ஆண்டிற்கான பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தை தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து, சேலம் சேலம் மாவட்டம், வேம்படிதாளம் அரசு அரசு மேல்நிலைப்பள்ளியில் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி தலைமையில், நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.செல்வகணபதி, மாநிலங்களவை உறுப்பினர் எஸ்.ஆர்.சிவலிங்கம் ஆகியோர் முன்னிலையில் மிதிவண்டிகளை வழங்கினார்கள். உடன் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திருமதி ப.மகேஸ்வரி, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் சின்னுசாமி ஆகியோர் உள்ளனர்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# “அன்னம் தரும் அமுதகரம்” 268 வது நாள்!

## திரு.வி.க.நகர் வடக்கு பகுதியில் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார்!

*சென்னை,நவ.15-*

முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” மாபெரும் திட்டத்தின் 268 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (14.11.2025), திரு.வி.க நகர் வடக்கு பகுதி: 1) வட்டம் 72, வெங்கடேசபுரம் புதிய காலனி, கன்னிகாபுரம். 2) வட்டம் 72அ, நேரு நகர், டிக்காஸ்டர் சாலை, புளியந்தோப்பு, சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர் பாபு, தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!” என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்.





இந்நிகழ்ச்சியில் சென்னை பெருகர மேயர் பிரியாராஜன், ப.தாயகம் கவி எம்.எல்.ஏ, செ.தமிழ் வேந்தன். புனிதவதி எத்தி ராஜன், எம்.சரவணன், பி.உதயசங்கர், இரா.வீர மணி, நா.துலுக்காணம், எம்.பெரோஸ்கான், கா.ராஜ்முகமது, திரு.வி.க. நகர் வடக்கு / தெற்கு வட்ட கழக செயலாளர்கள்: பரிமளா சுரேஷ்பாபு, மா.ருத்ரமூர்த்தி, எம்.ஏ. டீக்கா,

எம்.இசட்.அபோய், எஸ்.புஷ்பராஜ், ஜி.கிருஷ்ணகுமார், எம்.தமிம், பொல்லு டி.சுரேஷ்குமார், வி.க.வெங்கடேசன், எஸ். சசிகுமார், பா.பி.தாஸ், எஸ்.வெங்கடேசன். இத்திட்ட ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ். முரளி, பெரம்பூர் ஆர். ராஜன், கே.ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

### மதுரவாயல் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட

# வார்டு-151 அரசு பெண்கள் மேல் நிலைப் பள்ளியில் குழந்தைகள் தினவிழா!

## காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ., பங்கேற்பு!

*சென்னை, நவ.15-*

மதுரவாயல் சட்டமன்றத் தொகுதி, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-11, வார்டு-151, இளைய தலைமுறையின் சிந்தனையை நல்வழியில் தூண்டுதல் (Igniting Young Minds) குழந்தைகள் தின விழாவை முன்னிட்டு சாலை பாதுகாப்பு, போதை அழிவில் பாதை மற்றும் பருவகால அரசு மக்கள் பரஸ்பர உதவி பற்றிய தலைப்பில் கட்டுரைப் போட்டி, ஓவியப் போட்டி, பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்ற போரூர், அரசு பெண்கள் மேல் நிலைப் பள்ளியில் பயிலும் 6, 7, 8, 9-ஆம் வகுப்பு பயிலும் மாணவிகளுக்கு பொது மக்கள் உரிமை விழிப்புணர்வு அறக்கட்டளை சார்பாக சேவை செம்மல் அழகர் செந்தில் ஏற்பாட்டில் மாணவிகளை ஊக்கப்படுத்தும் விதமாக நடைபெற்ற நிகழ்ச்சியில் நேற்று 14.11.2025 காலை 10.00 மணியளவில் மதுரவாயல் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி, எம்.எல்.ஏ., கலந்து கொண்டு சிறப்புரையாற்றி மாணவிகளை ஊக்கப்படுத்தி பரிசுகளை வழங்கினார்.

இந்நிகழ்வில் வட்ட கழக செயலாளர் அ.மோசஸ், மாமன்ற உறுப்பினர் ச.சங்கர்கணேஷ் எம்.சி., மாவட்ட பிரதிநிதி வி.விஜயன், பகுதி அமைப்பாளர்கள் பி.ரகு, எம்.லோகேந்திரபாபு, வட்ட கழக நிர்வாகிகள் செ.ராமையா, எம்.சுந்தர், கே.குமார், கோ. கண்ணதாசன், என்.எஸ். விஸ்வநாதன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.



குழந்தைகள் தின விழாவை கொண்டாடும் விதமாக, இராயபுரம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட அரசு ஸ்டான்லி மருத்துவமனையில், சிகிச்சை பெற்று வரும் குழந்தைகளை, இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா. மூர்த்தி நேரில் சந்தித்து, ஊட்டச்சத்துகள் நிறைந்த உணவுப் பொருட்களை வழங்கினார். தொடர்ந்து சிகிச்சை பெற்றுவரும் குழந்தைகளை ஊக்கப்படுத்தும் விதமாக நடத்தப்பட்ட ஓவியப் போட்டியில், வெற்றி பெற்ற குழந்தைக்கு பரிசு வழங்கப்பட்டது. நிகழ்வில் அரசு ஸ்டான்லி மருத்துவமனை முதல்வர் டாக்டர். அரவிந்த், RMO திருமதி. வனிதா மலர் மற்றும் பேராசிரியர்கள், மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் குழந்தைகள் உடனிருந்தனர்.

### சேலம் மாவட்டத்தில்

# வேம்படிதாளம் அரசு மேல்நிலைப்பள்ளியில் மாணவர்களுக்கு மிதிவண்டிகள்!

## அமைச்சர் இரா.இராஜேந்திரன் வழங்கினார்!

*சேலம், நவ.15-*

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (14.11.2025) சிவகங்கை மாவட்டத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக 2025-26-ஆம் கல்வி ஆண்டிற்கான விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தை தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து, சேலம் மாவட்டம், வேம்படிதாளம் அரசு மேல்நிலைப் பள்ளியில் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் அவர்கள் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர். இரா.பிருந்தாதேவி தலைமையில், சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம். செல்வகணபதி, மாநிலங்களவை உறுப்பினர் எஸ்.ஆர். சிவலிங்கம் ஆகியோர் முன்னிலையில் மிதிவண்டிகளை வழங்கினார்கள்.

பின்னர், சுற்றுலாத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது:-

முதலமைச்சர் அவர்கள் கடந்த நான்கரை ஆண்டுகளில் பள்ளிக் கல்வித்துறைக்கென அதிகளவிலான நிதி ஒதுக்கீடு செய்து பல்வேறு சிறப்பான திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார்கள். எதிர்கால தலைமுறையினர் ஆகிய மாணவ, மாணவிகள் உலகளாவிலான கல்வியைக் கற்று பயனடையும் வகையில் நான் முதல்வன் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை அறிவித்துச் செயல்படுத்தி வருகிறார்கள். துணை முதலமைச்சர் அவர்களால் நேற்றையதினம் சிவகங்கை மாவட்டம், காரைக்குடியில் நடப்பாண்டிற்கான மிதிவண்டிகள் வழங்கும் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

சேலம் மாவட்டத்தில் 2021-2022-ஆம் கல்வி ஆண்டு முதல் கடந்த 4 ஆண்டுகளில் மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தின் கீழ் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயின்ற 51,058 மாணவர்களுக்கும். 55,123 மாணவிகளுக்கும் ஆக மொத்தம் 1,06,181 மிதிவண்டிகள் வழங்கப்பட்டுள்ளது. சேலம் மாவட்டத்தில் 2025-2026-ஆம் கல்வி ஆண்டிற்கான மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தின் கீழ் அரசு மற்றும் அரசு உதவிபெறும் 178 பள்ளிகளில் 11-ஆம் வகுப்பு பயிலும் 11,317 மாணவர்களுக்கும். 13,842 மாணவிகளுக்கும் ஆக மொத்தம் 25,159 மாணாக்கர்களுக்கு மிதிவண்டிகள் வழங்கப்படவுள்ளது.

நேற்றையதினம், சேலம் மாவட்டம், வேம்படிதாளம் அரசு மேல்நிலைப்பள்ளியில் பயிலும் 84 மாணவர்களுக்கும் மற்றும் 77 மாணவிகளுக்கும் மொத்தம் 161 மிதிவண்டிகள் வழங்கி இத்திட்டம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இதனைத்தொடர்ந்து சேலம் மாவட்டத்திற்குட்பட்ட அனைத்து அரசு/அரசு உதவிபெறும் மேல்நிலைப் பள்ளிகளுக்கும் நடப்பாண்டிற்கான மிதிவண்டிகள் வழங்கப்படவுள்ளது. தமிழ்நாடு அரசால் செயல்படுத்தக்கூடிய இதுபோன்ற பல்வேறு திட்டங்களை பள்ளி மாணவர்கள் நல்லமுறையில் பயன்படுத்தி தங்கள் வாழ்வில் சிறந்த நிலையை அடைய வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் இரா. இராஜேந்திரன் தெரிவித்தார்.

முன்னதாக வேளாண்மைத்துறையின் சார்பில் தார்பாலின், பயிர் விளைச்சல் போட்டியில் வெற்றி பெற்றவருக்கு பரிசு, தானியங்கி முறையில் நுண்ணீர் பாசன தொகுப்பு மற்றும் தோட்டக்கலைத்துறையின் சார்பில் நடமாடும் காய்கறி விற்பனை வண்டி என மொத்தம் 15 பயனாளிகளுக்கு ரூ.1,88,360 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளும், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் சார்பில் தலா ரூ.2.5 இலட்சம் மதிப்பீட்டில் மொத்தம் ரூ.40 இலட்சம் மதிப்பில் 16 கழிவுகள் சேகரிக்கும் வாகனங்களையும் அமைச்சர் இரா.இராஜேந்திரன் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திருமதி ப.மகேஸ்வரி, வேளாண்மை இணை இயக்குநர் சீனிவாசன், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறு பான்மையினர் நல அலுவலர் திரு.சின்னுசாமி, தோட்டக் கலைத்துறை துணை இயக்குநர் திருமதி மஞ்சுளா, தலைமையாசிரியர் திருமதி அமுதா உள்ளிட்ட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்துகொண்டனர்.



தாம்பரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட புனித தோமையார் மலை ஒன்றியம் முடிச்சூர் ஊராட்சியில் தாம்பரம் மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா.எம்.எல்.ஏ., ரூபாய் 5,கோடி 35,லட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வரும் மழை நீர் வடிகால் மற்றும் சிமெண்ட் சாலை அமைக்கும் பணிகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்நிகழ்வில் ஊராட்சி மன்ற துணைத் தலைவர் அ.விநாயகமூர்த்தி,கிளை செயலாளர்கள்.சுனில்மேத்யூ,பி.எஸ்.ரமேஷ்,ஊராட்சி மன்ற உறுப்பினர் புனிதா ராஜா அணிகளின் நிர்வாகிகள் சங்கர்,தனசேகர் ஆகியோருடன் கழக நிர்வாகிகள், மற்றும் பொது மக்கள் பங்கேற்றனர்.


